*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 161/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-5)***

*Name / Father's Name:* ***திருமதி.கலியம்மாள் க/பெ. வீராசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **09.06.2025.**

துவக்க நேரம் 06.21 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.ராமசாமி அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது செந்தாரப்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு சந்தியா என்ற பெண் வெளியே சென்றுவிட்டு வரும்பொழுது, எதிரி அவரது பொண்டாட்டிக்கு பொட்டு வைத்துவிட்டு போ என்று சொன்னதற்கு, சந்தியா எங்க வீட்டு பெரியவங்ககிட்ட சொல்லு என்று சொன்னதற்கு, எதிரி, சந்தியாவை கன்னத்தில் அடித்துவிட்டதால் அந்த பொண்ணு சத்தம் போட்டு ஓடிவருவதை பார்த்து நாங்கள் சென்று பார்த்தோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) சந்தியாவை, வெங்கடேஷ் அடித்துவிட்டதாக யார், என்னிடம் சொன்னார்கள் என்றால் சந்தியாவே, என்னிடம் சொன்னார். எந்த தேதியில் சந்தியா, என்னிடம் சொன்னார் என்றால் தேதி தெரியாது, நாளும் தெரியாது.

கூட்டமாக இருந்ததை பார்த்துதான் நான் சம்பவயிடத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சென்றபொழுது, சந்தியாவிற்கு காதுவலி அதிகமாக இருப்பதால், மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக சொன்னார்களா என்றால் இல்லை, நாங்களே சந்தியாவை பார்த்துவிட்டு, அதன் பின்புதான் அவர் மருத்துவமனைக்கு சென்றார்.

2) நான் சென்றபொழுது, சந்தியாவிற்கு காதுவலி அதிகமாக இருப்பதால், மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்பொழுது போலிசார் சொல்லிக்கொடுத்தபடி சந்தியா நாங்கள் சென்று பார்த்தபொழுது அந்த இடத்தில் இருந்ததாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 06.32 A.N

ஒம்/–C.உதயசுந்தரம்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.